**40 வரகுணனுக்கு சிவலோகம் காட்டிய படலம்**

வரகுண பாண்டியன் சிவபெருமானின் உண்மை பக்தன். ஒரு நாள் வேட்டையாடி திரும்பும்நேரம் சோர்ந்து நித்திரைச் செய்யும் ஓர் அந்தணன் மீது அவனது குதிரை ஏறி, அந்த அந்தணன் இறந்தான். அவன் இறப்பிற்கு காரணமானான மன்னனை பிரம்மஹத்தி தோஷம் பிடித்து வாட்டியது பிரம்மஹத்தி தோஷம் நீங்க பல வகையான தான தர்மங்கள் செய்தும் தோஷம் நீங்கவில்லை. மேலும் பரிகாரங்களும், பிராயசித்தங்களும் செய்தான். அந்தணர்களின் அறி-வுரையின்படி ஐயனின் கோயிலில் ஆயிரத்தெட்டு பிரதட்சணங்கள் செய்தான். இதில் மகிழ்ந்த ஐயன்சோழனோடு போரிடுகையில் சோழனை துரத்திச் செல்கையில் திருவிடைமருதூரில் அவனது கொடிய பழி நீங்கும் என அசரீரியாக கூறியருளினார்.

சிலகாலத்திற்குப்பின்சோழனுக்கும்பாண்டியனுக்கும் போர் மூண்டது. புறமுதுகிட்டு ஓடியசோழனை பாண்டியன் துரத்திச் சென்று காவிரியை அடைந்தான். பூசத்துரையில் நீராடி, திருவிடைமருதூரில் உள்ள மகாலிங்கத்தை வணங்க கிழக்கு வாயில் வழியாக உள்ளே நுழைந்தான். அப்போது அவனைத் துரத்தி வந்த பிரம்மஹத்தி உள்ளே செல்லாமல் வெளியேநின்றது. வரகுணன் லிங்கத்தை கண்ணாரக் கண்டு துதித்தான். அப்பொழுது ஜோதி வடிவமானஐயன் பிரம்மஹத்தி கீழக்கு வாயிலில் நிற்பதால் அவ்வழிச் செல்லாமல் மேற்கு வாயில் வழியாகச்மதுரைச் செல்லுமாறு கூறியருளினார்.

வரகுணபாண்டியன் சிலகாலம் அங்கு தங்கி மேலை கோபுரத்தைக் கட்டி, தன்பழியைத்தீர்த்ததெய்வத்தைஇடைவிடாதுதொழுதான். ஓர் சிவராத்திரியன்று சிவலோகத்தில் ஐயன்அன்பர்களுடன் எழுந்தருளியிருக்கும் எழிலைக் காண அருளும் படி ஐயனை வேண்டினான். உடனே சிவபெருமான் சிவகணங்களுக்கு தலைவனானநந்தியிடம்வரகுணனுக்குசிவலோகத்தைக்காட்டும் படி பணித்தார். நந்திதேவரும் வரகுணனுக்கு சிவலோகத்தைக் தரிசனம் காட்டி மகிழ்வித்தார். ப்ரம்மா, விஷ்ணு, இந்திரன் முதலியோரின் இருப்பிடங்களையும் சுட்டிக் காட்டி ஒவ்வொன்றையும் விளக்கினார்.

பின்பு சிவலோகம் மறைந்து பழைய மதுரையாக மாறியது. அன்றிலிருந்து மதுரை மாநகர் பூலோக சிவலோகம் என்று புகழுடன் விளங்கி வருகிறது.

**பல்லவி**

வரகுணன் வேட்டையாடி திரும்பு கையில் அவன்
குதிரையால் அடிபட்டு இறந்தான் ஓர் அந்தணன்

**அனுபல்லவி**

விரதமெடுத் துன்னை ஆயிரத்தெட்டு முறை
வலம் வந்தால் பிரம்மஹத்தி விலகும் என்றறிந்தான்

**சரணம்**

திருவிடைமருதூரில் பிரம்மஹத்தியை கோயில்
கீழ்வாயில் இருக்கச் செய்து மேல் வழி மன்னனை அனுப்பி
திருகைலாயத்தை மதுரையிலே ஓர்
சிவராத்திரியன்று கண்டிடச் செய்தீர்